தகவல் சட்டம் 2005
அறிவும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 07.05.2026

**முன்னிலை**

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2249/B/2024**

திரு.P.சிரவணன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம்,
கோவை - 18. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (07.05.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.P.சிரவணன் அவர்கள் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.இரா.இராஜசேகரன், உதவி இயக்குநர், கல்லூரிக் கல்வி இணை இயக்ககம், கோவை மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 20.02.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (07.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 01.08.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், தான் பணியில் சேர்ந்த 10.04.2008ம் தேதி முதல் மானியம் பெற நியமன ஒப்புதல் வழங்கி ஆணை பிறப்பிக்காமல் கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் உள்ளதற்கு தெளிவான தகவல் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 03.10.2023 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், பொள்ளாச்சி, NGM கல்லூரி அரசு உதவிபெறும் தனியார் கல்லூரி ஆகும் என்றும், கல்லூரி நிர்வாகத்தால் செய்யப்படும் ஆசிரியர்/ஆசிரியரல்லாத பணியாளர்களின் நியமனங்கள் விதிகளின்படி பரிசீலிக்கப்பட்டு மானிய ஒப்புதல் வழங்கப்படுகிறது என்றும், மனுதாரர் திரு.P.சிரவணன் என்பவர் உட்பட மொத்தம் 14 உதவிப்பேராசிரியர்கள் பொள்ளாச்சி, நல்லமுத்து கவுண்டர்

மகாலிங்கம் கல்லூரியில் நியமயம் செய்யப்பட்டு 10.04.2008 முதல் பணியில் சேர்ந்துள்ளனர் என்றும், 2007-08ஆம் கல்வியாண்டில் இறுதி வேலை நாள் 25.04.2008 ஆகுமென்றும், அடுத்த கல்வியாண்டிற்கு கல்லூரியின் முதல் வேலை நாள் 16.06.2008 என்றும், மேற்படி விவரங்களின்படி மனுதாரர். திரு.P.சிரவணன் உட்பட 14 உதவிப்பேராசிரியர்கள் நியமனங்கள் 2007-08ஆம் கல்வியாண்டின் இறுதி கட்டத்தில்(Fag End of the Academic Year) செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி நியமனங்களுக்கு 10.04.2008 முதல் மானியம் அனுமதித்தால் பருவ விடுமுறை ஊதியம் வழங்கும் நிலை எழுவதினால், அரசுக்கு நிதி இழப்பு ஏற்படும் என்பதால், மனுதாரர். திரு.P.சிரவணன் உட்பட 14 உதவிப்பேராசிரியர்களுக்கு 2008-09ஆம் கல்வியாண்டின் முதல் வேலை நாளான 16.06.2008 முதல் மானிய ஒப்புதல் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், இதே நடைமுறை தான் அனைத்து உதவிபெறும் கல்லூரிகளுக்கும் பின்பற்றப்படுகின்றது என்றும், மேலும் மனுதாரர். திரு.P.சிரவணன் என்பவருக்கு 16.06.2008 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு அதன் அடிப்படையிலேயே தகுதிகாண் பருவ நிறைவு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், இதனையே தகவலாக மனுதாரருக்கு 30.08.2023 மற்றும் 16.10.2023 ஆகிய தேதியிடப்பட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்ததார். மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகி அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் குறித்த அவரது கருத்தினை தெரிவிக்க தவறியுள்ளார்.

4. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், ஆவணங்களின் அடிப்படையில் பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை மேற்கொள்ள முகாந்திரம் ஏதுமில்லை என கருதி, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் ஆணையிடுகின்றது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2249/B/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம்,
கோவை - 18.

திரு.P.சிரவணன்,
கணிதவியல் உதவிப் பேராசிரியர்,
நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி,
கோயம்புத்தூர் - 642 001.

Copy to: File
Sj/Ps- 13/05/2026